உ
சிவமயம்

Registered as a News-paper in Ceylon
P. M. G. NO. H. A
59/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ம் திகதி ஆரம்பமான

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும் மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே

புத். ருரு] யாழ்ப்பாணம்:—சுபானு வூ ஆவணிமீ எஉ (1943 ஆகஸ்ட்மீ 23 திங்கட்கிழமை) [இல. ருகூ

## உணவுப் பொருள் மதிப்பு

உணவுக்கட்டுப்பாட்டுப் பகுதியையும் நெருக்கடிகால உதவிமாகாணத் தலைவர்களையும் சேர்ந்த உணவுப்பொருட் கடைகள் பண்டகசாலைகள் ஆகியவற்றில் எவ்வளவு உணவுப்பொருட்கள் இருக்கின்றனவென்று அடுத்த அக்டோபர் மாதம் மதிப்பிடவிருக்கிறது.

இவ்வாறு உணவுப்பொருட் கையிருப்புகளை மதிப்பிடுவதால் இலங்கையின் சகல பாகங்களிலுமுள்ள பண்டகசாலைகளின் கையிருப்புகள் தெரியவருவதுடன் அவற்றின் வரவுசெலவு விவரமும் அறிந்து கொள்ளப்படும். உணவுப் பொருட்களில் ஏதாவது குறைபு நேரிட்டாலும் கண்டுபிடிக்கப்படும். இவ்வேலை பூர்த்தியாக ஏறக்குறைய ஒரு வாரம் பிடிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

அநேக பகுதிகளின் சிப்பந்திகள்

இவ்வேலையைச் செய்வதற்குக் குறைந்தபட்சம் 300 உத்தியோகஸ்தர் தேவைப்படுவதாகச் சொல்லப்படுகிறது. உணவுக்கட்டுப்பாட்டதிகாரியின் பகுதியில் போதிய சிப்பந்திகளில்லாமையால் இவர் பிரதம காரியதரிசியிடம் உதவி கோரியிருப்பதாகத் தெரிகிறது.

எனவே, பல அரசாங்கப்பகுதிகளின் வேலையும் பாதிக்கப்படாதவாறு ஏற்பாடுகள் செய்யப்படும். தற்காலிகமாகக் கடமையாற்றும் சிப்பந்திகளுக்குப் பிரயாணப்படியும் உணவுக்காணப்படியும் வழங்கப்படும். அக்டோபர் மாதம் முதல் தேதி இவ்வேலை ஆரம்பிக்கவிருப்பதாலும் அன்று பொதுவிடுமுறை யாதலாலும் இவர்கள் மேலமிச்சமாகப் பார்க்கும் வேலைக்கு விசேஷ 'அலவன்ஸ்' அனுமதிக்கப்படும்.

வெவ்வேறு பகுதிகளையும் சேர்ந்த மேற்பார்வை அதிகாரிகள் தயாரிக்கும் அறிக்கைகளையும் உணவுப்பொருட்களின் நிலைமை பற்றிய புள்ளி விவரங்களையும் கொழும்பு உணவுக் கட்டுப்பாட்டதிகாரியிடம் சமர்ப்பிப்பர். ——

## ஜெர்மன் அரசாங்கம் பெர்லினில் இல்லை?

லண்டன் ஆக 19

ஜெர்மன் அரசாங்கம் முழுவதும பெர்லினை விட்டு வெளியேறி விட்டதென்று 'வோலகிஷர் போபாச்சர்' என்ற பத்திரிகை தெரிவிப்பதாக பேர்னேயிலிருந்து கிடைத்த ஒரு செய்தியை ஆதாரமாகக் கொண்டு அல்ஜியர்ஸ் றேடியோ இன்றிரவு ஒலிபரப்பியது. ——

## பள்ளிப் பிள்ளைகளுக்குப் பகற் போசனம்

பண்டாரவளை ஆக 19—

பண்டாரவளைப் பட்டினசபையின் சென்ற மாதாந்தக் கூட்டம் தலைவர் திரு. வ்வியன் பெரேரா தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது பண்டாரவளையிலுள்ள ஒவ்வொரு பள்ளிப்பிள்ளைகளுக்கும் உணவளிக்குஞ் செலவிற காற்பங்கைப் பட்டினசபை செலுத்த வேண்டுமென்று மிஸ்றர். எஸ். ஏ. மால பிரேரித்தார். இப் பிரேரணை மிஸ்றர். ஆர். எச். கரிக்டனுல ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

# மற்றிரு இத்தாலியத் தீவுகள் சரணகதி

## சிஸிலியில் இந்தியத் துருப்புகளின் சேவை

லண்டன் ஆக 20—

வட ஆபிரிக்காவிலிருந்து இன்று வெளியான கடற்படைப்பகுதி அறிக்கையொன்று கூறுவதாவது:—

17-ம் திகதியன்று காலை இத்தாலி ஓரமாகவுள்ள லிபாரி; ஸ்ட்ராம்போலி ஆகிய இரு பிரதான தீவுகள் அமெரிக்க கடற்படையிடம் சரண்புகுந்தன. இதன் மூலம் ஐயோனியன் தீவுகளிலெல்லாம் நேசநேச ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டது. 17-ம் திகதியன்றிரவு கலிபிரியா தீபகற்பத்தின் மேற்குக் கடற்கரைமீது நமது நாசகாரிகள் பீரங்கிப் பிரயோகஞ் செய்தன.

பிருத்தானிய விமானங்கள் நேற்றிரவு பெர்லினைத் தாக்கினவென்று உத்தியோக முறையில் அறிவிக்கப்படுகிறது.

மெஸினவிலிருந்து ராய்ட்டரின் விசேஷ நிருபர் எழுதுவதாவது:-

பிருத்தானிய அமெரிக்க கனேடியத் துருப்புகள் சிஸிலியில் சத்துருவை எதிர்த்துப் போராடின. இந்தியத் துருப்புகளும் அப்போராட்டத்தில் பிரதான பங்கு எடுத்துக் கொண்டன. இவைகள் மற்றப்பிருத்தானிய அமெரிக்க துருப்புகளுடன் ஸிரகூஸாக்குத் தெற்கே இறங்கின. இந்தியத் துருப்புகள் முழுவதும் தற்காப்பு நடவடிக்கைகளுக்கே உபயோகித்துக்கொள்ளப்பட்டன.

ஏராளமான யுத்த 'சப்ளை'கள், வாகனங்கள் 'ஸ்டோர்'கள் ஆகியவைகளைக் கரையில் இறக்கும் பிரதானமான வேலையில் இந்திய வீரர்கள் ஈடுபட்டிருந்தனர். மூன்று நாட்களுக்குத் தொடர்ந்தாற்போல ஜெர்மன் விமானங்கள் இவர்கள் மீது பீரங்கிப்பிரயோகஞ் செய்தபோதிலும் இந்திய வீரர்கள் இடைவிடாமல் தங்கள்வேலையைச் செய்து வந்தனர். முதற்றரமாகப் போரிடக்கூடிய படைகள் இம்மாதிரியான வேலைக்கு அனுப்பப்பட்டதற்குப் பிரதான காரணம் இதுதான். கரையோரமாக இறக்கப்படும் படைகள் அவைகளைப் பாதுகாத்துக் கொள்வதுடன் சிலசமயம் அங்குமிங்குமுள்ள சத்துருத் துருப்புகளை அழிக்கும் வேலையிலும் ஈடுபட வேண்டியிருக்கிறது. ஒருசமயம் ஜெர்மனியர் பாரசூட் வீரர்களைக் கொன்றுதாகலாமென்று கருதப்பட்ட குன்றொன்றில இத்துருப்புகள் வைக்கப்பட்டன.

## பழைய 'ரயர்களை' விற்கக் கூடாது

### அனுமதிச்சீட்டின்றி வாங்கவும் முடியாது

ரயர்க் கட்டுப்பாட்டதிகாரியின் அநுமதிச் சீட்டின்றி எவரும் இனிமேல் உபயோகிக்கப்பட்ட ரயர் ரியூப்பு ஆகியவற்றை வாங்கமுடியாது. அதே போன்று உபயோகிக்கப்பட்ட ரயர் ரியூப் ஆகியவற்றை அநுமதிச் சீட்டின்றி இனிமேல் எவரும் விற்பனை செய்யவும் முடியாது. இந்தவிபரம் சென்ற வெள்ளிக்கிழமை இரவு வெளியிடப்பட்ட கசெற்றிற் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

விபரங்கள் வேண்டும்

மோட்டார்க் கார்களில் உபயோகிக்க முடியாத நிலைமையில் இருக்கும் ரயர்களையும் ரியூப்புகளையும் வைத்திருப்போர் அவற்றைப்பற்றிய விபரங்களைத் தமக்கு அறிவிக்குமாறு மோட்டார்ச் சொந்தக்காரர்களிடம் கேட்பதற்குக் கட்டுப்பாட்டதிகாரிக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. கட்டுப்பாட்டதிகாரிக்கு விபரங்கள் அறிவிக்கப்பட்டபின், அந்த ரயர்கள் அல்லது ரியூப்புகள் வேறு இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டால் அந்த விபரமும அப்புறப்படுத்தப்பட்டு ஏழு நாட்களுக்குள் கட்டுப்பாட்டதிகாரிக்கு அறிவிக்கப்படவேண்டும்.

மோட்டார்க் காரிலிருந்து கழற்றி எடுக்கப்படும் பழைய ரயர்களும் ரியூப்புகளும மோட்டார் வைக்கப்படும இடத்திலல்லாது வேறிடத்தில் வைக்கப்படுமாயின, அந்த விபரமும் ஏழுநாட்களுக்குமுன, ரயர்க் கட்டுப்பாட்டதிகாரிக்குத் தெரிவிக்கப்படவேண்டும்.

பழைய ரயர்களின் விலை

உபயோகிக்கப்பட்ட ரயருக்கு அல்லது ரியூப்புக்கு ஆகக்கூடுதலான விலையைக் கட்டுப்பாட்டதிகாரி அல்லது அவருடைய அதிகாரத்தோடு வரும் அவருடைய பிரதிநிதி நிர்ணயிப்பார். உபயோகிக்கப்பட்ட ரயர்கள் வைக்கப்பட்டிருக்கும் இடங்களிற் பிரவேசித்து அந்தப் பொருட்கள் பரிசீலனை செய்யப்பட்டபினபே இந்தவிலை நிர்ணயிக்கப்படும்.

## மிஸ்றர். ஆனே

### பத்திரிகைக்காரர்களுக்குக் கூறிய பேட்டியுரை

புதுடில்லி, ஆக, 19—

இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டிருக்கும் மிஸ்றர். எம். எஸ். ஆனே பத்திரிகைக்காரர்களுக்குப் பேட்டியளித்தபோது பேசியபோது இலங்கையிலுள்ள இந்திய அரசாங்க ஏஜெண்டுக்குத் திட்டமான சில கடமைகள் கொடுக்கப்பட்டிருப்பினும் தாம் செய்ய விருக்குங் கடமைகளை வரையறை செய்யப்படவில்லை யென்று கூறினர். அவர், தாம் இந்தியாவின் முதலாவது ஸ்தானிகராகச் செலவதாயும் முதலில இலங்கையிலுள்ள பிரபல இந்தியப் பிரதிநிதிகளைச் சந்திக்க உத்தேசித்திருப்பதாயும் கூறினர். அவர் மேலும் பேசும்போது தாம் விஷயங்களை நேரில் அறிந்து கொள்ள விரும்புவதாயும் தேயிலைத் தோட்டங்கள்சிலவற்றிக்கு விஜயஞ் செய்து இந்தியத் தோட்டத் தொழிலாளரின் நிலைமைகளைத் தாமே நேரில் அறிந்து கொள்ள உத்தேசித்திருப்பதாயுந் தெரிவித்தார்.

## வங்காளத்தில் உணவுக் கஷ்டம்

### கல்கத்தா நகரசபையின் உத்தேசம்

கல்கத்தா ஆக 19—

வங்காளத்தில் உணவு நிலைமையைச் சமாளிப்பதற்காக ஏனைய நாடுகளிலிருந்தும் இந்தியாவின் ஏனைய பாகங்களிலிருந்தும் அத்தியாவசிய உணவுப் பொருள்களும் தானியவகைகளும் பெற்றுக்கொள்ளப்படவேண்டுமென்று அரசாங்கத்தாரால் அஸோஸியேட்டட் பிரஸுக்கு அதிகார முறையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வட தென் அமெரிக்காக்களிலிருந்தும், ஆஸ்திரேலியாவிலிருந்தும் வங்காளத்துக்கு உணவுப்பொருட்களை 'சப்ளை' செய்வதற்கு ஏற்பாடு செய்யுமாறு தற்போது குவிபெக்லிருக்கும் மிஸ்றர். சர்ச்சிலுக்கும் மிஸ்றர் ரூஸ்வெல்டுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கவேண்டுமென்ற யோசனையைக் கல்கத்தா நகரசபை நாளை விவாதிக்கும். இந்திய அரசாங்க உணவு அங்கத்தவர் இவ்வார இறுதியிற் கல்கத்தாவுக்கு விஜயஞ் செய்யும்போது இந்தத்திட்டங்கள் பூரணமாக ஆலோசிக்கப்படுமென்பதிற் சந்தேகமில்லை.

இதே நேரத்தில் உணவுப்பொருட்களைக் கல்கத்தாவிற் பங்கிடு செய்வதற்கான திட்டங்கள் அபிவிருத்தியடைந்திருக்கின்றன. பொதுஜனங்களின் உதவியாலும் அரசாங்கத்தின் உதவியாலும கல்கத்தாவிலும் வங்காளத்தின் ஏனைய பாகங்களிலும பெருந்தொகையான இலவசச் சாப்பாட்டுவிடுதிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. எங்கெங்கு இலவசச சாப்பாட்டு விடுதிகள் அவசியமோ அங்கெல்லாம் அவற்றைத் தாமதமின்றி ஸ்தாபிக்குமாறு ஸ்தல அதிகாரிகள் உத்தரவிடப்பட்டிருக்கின்றனர்.

வங்காளத்தில் உணவுப்பொருட்களின் கணக்கெடுப்பு நடந்தபோது ஏராளமான உணவுப்பொருட்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. உணவுப்பொருள் உற்பத்தியும சென்ற இரண்டொரு வாரங்களாக அபிவிருத்தி அடைந்து வருகிறது. உணவு உற்பத்தி வெற்றிகரமாக நடைபெறுவதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ளுமாறு ஸ்தல அதிகாரிகளுக்கு அரசாங்கத்தார் உத்தரவிட்டிருக்கின்றனர்.

## சவர்க்காரம் விற்றவருக்கு ரூ. 300 அபராதம்

அவிசாவிளை ஆக 19—

தன்மோதரையைச் சேர்ந்த ஏ பால்பாண்டியன் என்னும் வியாபாரி இரண்டுகட்டி 'சன்லைட்' சவர்க்காரத்தை மிதமிஞ்சிய விலைக்கு விற்ற குற்றத்துக்காக ரூபா 300 அபராதம் விதிக்கப்பட்டார். ஒரு கட்டி சவர்க்காரத்தின் ஆகக்கூடுதலான விலை 17 சதமாகக் கட்டுப்படுத்தப்பட்டிருக்கையில், இருகட்டிகளையும் 80 சதத்துக்கு விற்றதாக எதிரிமீது குற்றஞ் சாட்டப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம் சுபானுஹூ
ஆவணிமீ ௭௨ திங்கட்கிழமை


## இலங்கையின் இயற்கை வளன்

II

இலங்கை யரசினர் அக்காலந்தொட்டு இற்றை வரையில் இந்நாட்டு மக்களுக்கு ஊட்டி வருங் கல்விமுறை, இங்குள்ள கற்ற மக்க ளெவரையும் அற்ப வேதனம் பெற்றுக் கொண்டாயினும் அரசாங்க சேவை செய்யத் தூண்டும் இயல்பினதாகுமே யொழிய, விவசாயம் கைத்தொழில் வாணிகம் என்னும் இப்படிப்பட்ட சுயாதீனத்தோடு கூடிய கருமங்களைச் செய்தற்கு அந்தப் படித்த மக்களைத் தூண்டும் இயல்புடைத்தன்று. இவ்வளவோடு மாத்திரம் அமையாது, இக் கல்விமுறை மேலே எடுத்துக் காட்டப்பட்ட விவசாயம் முதலிய சிறந்த தொழில்களில் ஈடுபட்டுழைப்பது கௌரவக் குறை வென்ற போலிக்கௌரவத்தை ஆக்குவதோடு, அச் சிறந்த தொழில்களில் வெறுப்பையும் உண்டாக்கும் தன்மையதாகும். ஒருகலாசாலையிலே உயர்ந்த வகுப்பிற் கல்வி பயிலும் ஒரு மாணாக்கன் தோட்டஞ் செய்யுந் தொழில் பூண்ட தன் தகப்பனுக்கு அத் தோட்டஞ் செய்யுந் தொழிலிலே துணைபுரிவதற்குக் கூச்சமுறுவதை நாம் நேரிற் காணலாம். இவை மாத்திரமா? இல்லை, இன்னமும் உண்டு; தன் பிதா தோட்ட முயற்சி செய்பவரென்று நாலுபேர் முன்னிலையில் இந்த மாணாக்கன் சொல்வதற்கு இலச்சைப்படுகின்றான். இப்படிப்பட்ட கல்வி உழுதுண்டு வாழுதல் முதலாம சிறந்த தொழில்களை இந்நாட்டுமக்கள செய்வதற்கு அநுகூலமாக யிருக்குமா? பிரதிகூலமாக இருக்குமா? ஆரும ஆராய்ந்து அறிநது கொளளலாம்.

இந்த நவீனக் கல்வியின் தீமை இவ்வளவில் நின்றுவிடவில்லை. எங்கள் தாய்ப் பாஷையை வெறுக்கச் செய்தது. தாய்மொழியி லுள்ள நூலகளிற் சொலலப்பட்ட அரிய ஒழுக்கங்கள், எங்கள் மூதாதைகளின் மகத்துவம், அவர்கோட்பாடு, தொன்மை, சிக்கனம முதலியவைகளை யெல்லாம் அவமதிக்கச் செய்தது; சமய நம்பிக்கையைக் கெடுத்து விபரீதம் பேசச்செய்தது. சொந்த நாட்டுப் பொருள்களையும் ஔஷதங்களையும் புறக்கணிக்கச் செய்து அந்நிய நாட்டுப் பொருள் பண்டங்களையும் ஔஷதங்களையும் ஆகாரங்களையுங் கைக் கொள்ளச் செய்தது. வறுமையிற் செம்மையான என்று சொல்லத்தக்கனவும் இத் தேச சுவாத்தியத்திற்கு ஏற்றனவுமாகிய உடை, நடை, பாவனைகளை உபயோகியாது செய்து, மேலைத் தேச உடை நடை பாவனைகளையும் இன்னும் அந்நாட்டில் என்ன என்ன பொருந்தா முறைகளுண்டோ அவைகளை யெல்லாம் நெய்யரி போல ஏற்றுக்கொள்ளும்படி அபேட்சிக்கச் செய்தது. இவைக ளெல்லாவற்றிலும் அதிகமாக இந்த விபரீதக் கல்விமுறை இங்குள்ள மக்களை இடாம்பீகர்களாகவும்மடியராகவும் காலகதியில் மிடியராகவும் ஆக்கிவிட்டது; அற்ப கருமத்திற்கும் அந்நியரையும் அந்நிய நாடுகளையும் எதிர் பார்த்திருக்கச் செய்துவிட்டது. தொகுத்துச் சொல்லுகில் இவ் விபரீதக் கல்வியால வந்ததீமை பல நன்மை சில எனச் சொல்லுதல் மிகையாகாது.

இனி, கைத்தொழில் வாணிபம் முதலியன் விஷயமாகச் சொல்லுகில், எங்கள் அதிகாரிகள் இந்நாட்டிலுள்ள மூலக் காரணப் பொருள்களை இங்கிருந்து மேல் நாட்டிற்குக் கொண்டு போய் அங்கு வேண்டிய வேண்டிய பொருள்களை ஆக்கிப் பின்னர் இங்கு கொண்டு வந்து விலைதுறைவாக விற்கும் முறையைக் கைக்கொள்ளத் தலைப்பட்டனர். இந்தியாவில் விளையும் பருத்திப் பஞ்சு இங்கிலாந்திற்குப் போய்ப் பல்வகைத் துணிகளாகி மீண்டு இந்தியாவிற்கும் இலங்கை முதலிய கீழைத் தேசங்கட்கும் வந்து குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருதல் எவருமறிந்த இரகசியம். இந்த இலங்கையிலே ஆக்கப்பட்ட தேயிலை பின்னர் இங்கிலாந்திற்குப் போய், அங்கே ஆக்கப்பட்ட தகரக் கூடுகளில் அழகுற நிறைக்கப்பட்ட பின மீண்டு இலங்கையில் வந்து விலைப்படுமானால், எங்கள் அதிகாரிகள் இந்நாட்டுக் கைத்தொழிலை விருத்தி செய்தற்கு ஏதும முயற்சி செய்தன ரென்பதைச் சொல்லவும் வேண்டுமா? மேலைத் தேசத்தில் ஆக்கப்படும் பொருள்கள், இந்நாட்டினர் ஆக்கப்படும் பொருள்களைக் காட்டிலும் குறைந்த விலைக்கு விற்கப்படவே, இங்குள்ள மக்கள் தம் தொழில் தமக்குச் செய்யக் 'கட்டாது' என்ற காரணம் பற்றி அத் தொழில்களைச் செய்யாது கைவிட்டனர். தென்னாபிரிக்காவல் ஆக்கப்பட்ட இஞ்சியை, லண்டன நகருக்குக் கொண்டு போய்ச் சுக்கு (வேர்க்கொம்பு) ஆக்கிப் பின இலங்கைக்குக் கொண்டு வந்து இங்கே அந்தச் சுக்கு விற்கப்படும் போது, அதனை, இலங்கையில் ஆக்கப்படும் இஞ்சி சுக்கு என்னுமிவைகளைக் காட்டிலும் குறைந்த விலைக்கு வாங்கலா மென ஆசிரியர் திரு. கந்தையா அவர்கள சொன்னதும், மேலே நாம் எடுத்துக் காட்டிய விஷயத்திற்குச் சான்று பகர்வதாகும்.

இனி, இந்த நாட்டிலுள்ள மக்கள் ஆண்களாக, பெண்களாக நவீன நாகரீகங்களையும் அந்நிய பழக்க வழக்கங்களையும், சுதேசப் பொருள்களைப் புறக்கணித்து அந்நிய பொருள்களையும் எவ்வகையான காரணமு மின்றிச் சிக்கனத்தையும் பொருட்படுத்தாமல் குருட்டுத் தனமாகக் கைக்கொள்ளும் பின்பற்றும் இயல்பு பூண்டவர்கள். இம்மக்களுடைய இப்படியான இயல்பு இந்நாட்டினர்க்குப் பிரதிகூலமாகவும் அந்நிய நாட்டினர்க்கு அநுகூலமாகவும் இருக்கிறது. எங்கள் நாடு ஈனநிலை யடைந்ததற்கும் நாங்கள் நித்திய குழந்தைகள் போல் எந்த நேரமும் எதற்கும் அந்நிய நாட்டினர் கையையே பார்த்தபடி நின்று இடர்ப்படுதற்கும் மேலே எடுத்துக் காட்டியவை பிரதான ஏதுக்களினலாகும்.

இலக்கியப் பகுதி:

# திருப்பூவண நாத ருலா

[ க. கி. ந. ]

IV

இப் பெருவள்ளலுடைய திருமேனியிலே பாதிதான் தெள்ளமுதம் (உமையம்மையாரின் பாகம்) மற்றையொருபாதியும் விடம்என்று ஓர்வார். சுவாமீ! உமது சடைமேலுள்ள இந்த எம்மருந்தினுற் குளிர்ந்திருப்பதோ அம்மருந்தைச் சொல்லீர் என்பார்கள். முன்னுளில் மீனின்மேல் வலைவீசிப் பிடித்தீர். இந்நாளில் மாலாகிய வலையை வீசி எம் விழிகளாகிய மீனைப் பிடிக்கின்றீர் என்பார்கள். நீர் போந்து இப்புட்பவனத்தைப் பண்ணையுடைய பவளவாயராகிய முனிபன்னியர் வாழுந் தாருவனமாக்கினீர் என்பார்கள். புட்பவனம் உமக்கோ காமனுக்கோ காணியாகவுள்ளது. (காணி-உரிய இடம்; படைவீடு) சொல்லீர் என்பார்கள். பிரானை என்பார்கள். பாரித்த தேரோட, ஓட, பின்சென்று ஓடியோடிக் கண்ணீரோட ஓட நின்று நெட்டுயிர்ப்பார்கள். இவர்களில் அட்டதிக்காரும் பெண்மையழகு குடிபுகுதற்காக விட்டதொரு மூர்த்தம் என்று சொல்லத்தக்க பேதை (5-7)யும்ஒருத்தியாவள். (பேதைப் பருவத்தை இவ்வாசிரியர் வருணிப்பது அழகாக இருக்கின்றது) இவள் நனையும் போதியும் மலரும் கொட்டையும் மதுவும் மணமுமாகிய ஆறும் (இவள்பின் அடைதற்குரிய பெதும்பைப் பருவ முதலிய ஆறையுங் குறிப்பித்தபடி) தன்னுளடக்கும் அம்புயம். மன்மதனைச் சிறிய வழிதாங்கும் நாதனாகிய சிவபிரானை வில்வேளின் மனையாகிய இரதி பழி வாங்குதற்காகப் பெற்றுலொத்த பாவை. சங்கைப் பொருந்தாத தரளம். மன்மதனது செங்கை பொருந்தாத சிறுகரும்பு. பூத்தறியாத பூங்கொம்பு. போகமறியாப் பைங்கூழ். கோத்தறியாத குலரத்னம். விரித்தறியாத தோகைமயில். பாலும் நீரும் பிரித்தறியாத அன்னப்பிள்ளை. புட்பவனமெய்தி விளையாடாத இளஞ்சுரும்பு. சுவர்ச்சித்திரத்தில் தீட்டப்பெற்ற கதலிக்கனியைக் கையிற் கிளி அருந்துதற்காகக் காட்டி விளையாடுபவள். பூனையைக் கண்டவுடன் தன்னுடைய ஓவியப்புறுவை ஆசையோடு கூட்டிற்கு வா (இன்றேல பூனை கடித்துவிடும்) என்று அழைப்பவள். நிலவைப் பாலெனக் கருதிப் பளிக்கு வள்ளத்தினில் முகந்து வாய் வைப்பவள். வடியாத தேன்போலும் மழலைச் சொல்லையுடைய வாயாள்.

—தொல்லபர
பக்கக் கலைகள் பயப்பயப் போய்த்
திரும்ப
ஒக்க நிறைந்தனைய ஒண்ணுகை
யாள் —மிக்கமுத்தி
நாட்டினுமா ரூர்விரும்பும் நாவலூ
ரன்மணம்போற்
கூட்டினுங் கூடாத கூந்தலாள்-
வீட்டில்
நிறைந்த திருநெடுமால் நீள்செவியி
னுள்ளே
மறைந்த மதுகயிட வர்போற்—
பெரும்பிரண
வத்தி லடங்கு மறைபோல்
ததீசிசரீ
ரத்தி லடங்குவச்சி ராயுதம்போல்-
குத்திரத்தின்
மேலொரு நாளொருத்தி மெய்யிற்
கனல்வேந்தன்
சால வொளித்த தகைமைபோல்—
வாலிதனை
யெய்ய மறைந்த இராமன்போற்
றேன்றிவர
மெய்யின் மறைந்த வியன்
முலையாள்.

(இவ்வடிகளில் முத்தி யுலகத்திலும் சிறந்ததாகத் திருவாரூரை விரும்பிய நாவலூரன் என்றது சுந்தரமூர்த்தி நாயனாரை. சுந்தரமூர்த்தி நாயனாருடைய மணம் முன் கூட்ட முயன்றும் பின் கூட்டப்படாமற் போனமை ஈண்டு உவமம். வீட்டில்-பிரளயகாலத்தில். மதுகயிடவர்-மதுவும் கைடவனும்; இவ்விருவரும் அசுரர். ததீசி முனிவருடம்பில் வச்சிராயுத மடங்கியிருந்தமை திருவிளையாடல் இந்திரன் பழிதீர்த்த படலத்தால் அறியலாகும். ஒருத்தியென்றது ஔரவ முனிவரின் தாயை; வடவைத்தீ முதலியவற்றின்காரணமாகிய கடுங்கோபத்தையுடைய அம்முனிவரை அவர் தாய் நெடுங்காலம் தொடையுள் தரித்த வரலாறு பாரதம், ஆதிபர்வம், ௧௮௬-ம் அத்தியாயத்தால் அறியற்பாலது) இப்பேதையைக் கைத்தாய்தன் மடியிலிருத்தி அவள் மழலைமொழி திருந்தும்வண்ணம் பைங்கிளிக்கு மென்சொற் பயிற்றுதல்போல, திருப்பூவணநாதனுடைய திருநாமங்களை எடுத்தெடுத்துப் பயிற்றி அவள் சொல்லைக் கேட்டு மகிழ்ச்சியடைவாளாயினள், அவ்வமயத்து,

—எங்குமொரு
தாய்வயிறு காணுத் தருமத்
திருவுடம்பை
வேய்வயிறு கண்ட வியன்பதியும்
(திருநெல்வேலி)
—காவிரிவாய்ச்
சீருருவப் பேருருவச் செந்தீத்
திருவுருவம்
நீருருவ மாக நிகழ்பதியும்
(திருவானைக்கா)
—ஒருமையால்
ஆர்க்குந் தெரியா வருமைத்
திருமேனி
சேர்க்குந் தழும்பிருந்த சீரூரும்
(திருக்காஞ்சி)
—வர்க்குமறை
தேற்றுமயன் காணுத் திருமுடியை
வையைப்பே
ராற்றின் மணல்கண் டறிபதியும்
(மதுரை)
—போற்றுநெடு
மாய னறியா மலர்ப்பாதம்
பொன்னனையாள்
தூய மனையறியுந் தொன்னகரும்
(திருப்பூவணம்)

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்க்கை வரலாறு

(கோழும்பு விவேகானந்தசபையில், சுந்தரமூர்த்திநாயனார் குருபூசைத் திருநாளன்று (8-8-43) கோட்டாஞ்சேனை திரு. வை. முத்துக்குமாரசுவாமி அவர்கள் செய்த சோற்பொழிவின் சாரம்)

அவைத் தலைவர் அவர்களுக்கும் சிவநேயச் செல்வர்கள், செல்விகளாகிய அன்பர்கள் யாவருக்கும் எனது வணக்கம் உரியதாகுக!

சுந்தரமூர்த்தி நாயனார் வரலாற்றை உமாபதி சிவாசாரியார் திருத்தொண்டர் புராண சாரத்தில் இரு விருத்தங்களில் பாடி அருளியிருக்கின்றார். அவ்விருத்தங்கள் இவை:

(அ) 1 தண் கயிலை நீங்கி 2 நாவலூர் வாழ் சைவனார் சடையனார் தநயனாய் 3 மண்புகழ அருள் துறையான் ஓலை காட்டி மணம் விலக்க வன்றொண்டர் ஆதிகை சேர்ந்து 4 நண்பினுடன் அருள் புரிய வாரூர் மேவி 5 கலம் கிளரும் பரவை-தோள் நயந்துவைகி 6 திண் குலவும் விறல் மிண்டன் திறல் கண்டு எத்துந் திருத்தொண்டத் தொகை யருளால் செப்பினரே.

(ஆ) 7 செப்பலருங் குண்டையூர் நெல் அழைத்துத் 8 திருப்புகலூர்ச் செங்கல் செழும் பொன்னாச் செய்து தப்பின் 9 முதுகுன்றர் தரும் பொருளாற்றிட்டுத் தடத்தெடுத்துச் 10 சங்கிலி தோள் சார்ந்து 11 காதன் ஒப்பிறனித் தூது வந்து 12 ஆறு ஊடுகிறி 13 யுறு முதலை சிறு மதலை யுமிழ நல்கி 14 மெய்ப்பெரிய களிறேறி அருளால் சேர வேந்தருடன் வடகைலை மேவினரே.

நமது நாயனார் வரலாற்றைப் பதினான்கு முக்கிய அம்சங்களாகப் பிரித்து அவை ஒவ்வொன்றையும் விளக்குவாம். தண்கயிலை நீங்கி:
[சுந்தரமூர்த்தி நாயனாரின் முற்பிறப்புப் பெயர் ஆலாலசுந்தரர். அவர் சிவபெருமானின் பேரழகுள்ள பிரதிவிம்பம்.]

கைலாசத்திலே சிவபெருமான் பூதபடைகளுடன் புடைசூழ வீற்றிருக்கிறார். ஆலாலசுந்தரர் திருநந்த வனத்துக்குப் பூக்கொய்யப் போகிறார். அதே பூந்தோட்டத்துக்குத் தேவி பூசைக்குச் சேடியர்களில் இருவர், அனிந்திதை கமலினி என்பவர்கள் பூப்பறிக்க வருகின்றனர். சுந்தரர் இவர்களை நோக்கினார்—அவர்களும் இவரை நோக்கினர். அப் பார்வையில்............ அன்பு கலந்த ஆர்வம்..........சுந்தரரின் ஒளி........... சேடியர்களின கனவுடன் கலந்து நின்றது........ சர்வ வல்லவராகிய பெருமான் ஒவ்வொரு ஆத்மாக்களுக்கும் தாம் தாம் விரும்பியவாறு அளக்கிற பெருமையுள்ளவர் இவர்களின் உள்ளங்களை உணர்ந்தார். "சுந்தரனே! நீ பெண்கள் மேல் ஆசை வைத்தபடியால் தக்ஷண பூமியிலே மானுட தேகம் எடுத்து உனது இச்சையைப் புசிப்பாய்" என அருள் புரிந்தார். சுந்தரர் தான் செய்த பாவத்தை உணர்ந்தார். பதை பதைத்தார், கண்ணீர் சொரிய "சுவாமி! வாழ்க்கையாகிய கடலில் நான் தத்தளித்துக் கொண்டிருக்கும் பொழுது என்னை ஆட்கொண்டு அருளல் வேண்டும்" என்று வேண்டினர். கருணைத் தடங்கடலாகிய சிவபிரான் இதற்கு இசைந்தார்.

2 சுந்தரரின் மறுபிறப்பு:—திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே பிராமண குலத்திலே சடையனார் என்பவருக்கு இசைஞானியார் வயிற்றிலே சுந்தரர் அவதரித்தார். அவர் பிறந்தது எட்டாம் நூற்றாண்டளவில என்றே தற்கால ஆராய்ச்சியாளர் அதற்குச் சில நூற்றாண்டுகள் முன்பாகவே இவர் இருந்ததாகக் கொள்ளுகின்றனர். அவருடைய பெற்றோர் இந்த அழகான குழந்தைக்கு வைத்தபெயர் நம்பியாரூரர் என்பது.

இப்பிள்ளை ஒருநாள் வீதியிலே சிறுதேர் உருட்டி விளையாடும் பொழுது, அந்த நாட்டு அரசர் நரசிங்க முனையர் என்பவர், இவர்மீது ஆசை கொண்டு தமது அரண்மனைக்குக் கொண்டு போய் வளர்த்து வந்தார். ஐந்து வயசிலே உபநயனஞ் செய்யப் பெற்று வேதங்களை அத்தியயனஞ் செய்து, சகல கலைகளிலும் மகாபாண்டித்தியம் அடைந்து பதினாறாட்டைப் பருவம் அடைந்தார் நம்பியாரூரர்.

3 பதினாறு வயசு வந்தவுடன் நம்பியாரூரருக்கு விவாகம் செய்ய அவருடைய பெற்றோர் ஒழுங்கு செய்தனர். தமது பந்துக்களில் ஒருவராகிய புத்தூரில் இருந்த சங்கட சிவாசாரியரின் மகளை விவாக நிச்சயம் செய்யப்பட்டது. நல்ல நாளிலும நல்ல முகூர்த்தத்திலும் நம்பியாரூரர் சகல பந்து மித்திரர்களுடன் திருமணக் கோலங் கொண்டு பட்டு வேஷ்டி தரித்து, உத்தரீயம் அணிந்து, திலதம் இட்டு குதிரை மீதேறிப் பவனியுடன் பெண்வீட்டுக்கு வந்து திருமணப் பந்தரில் இருந்தார். அச்சமயத்தில் ஒரு கிழப் பிராமணன் வந்து ஒரு முறியோலை காட்டி "இந்தத் திருநாவலூரனாகிய நம்பியாரூரன் எனக்கு அடிமை', எனக் கூறினர். நம்பியாரூர் சிரித்து (இகழ்ச்சியாக) "நீர் கூறினது நன்று நன்று' பிராமணர்களுக்குப் பிராமணர் அடிமையாதல் இவ்வுலகில் இப்பொழுது முதல் முறையாக நாம் கேட்டோம் ..........என்று கோபித்து முறியோலையைக் கிழித்தார். கிழப் பிராமணன் 'இது முறையோ' எனக் கூவி, திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்து அங்குள்ள சபையிலுள்ளோர் ஒப்புமாறு காட்டி, மணம் புகவொட்டாயல் தடுத்து மறைந்தருளினர். நம்பியாரூரர் அன்று தொடக்கம் வன்றொண்டர் என்னும் பெயர் பெற்றார். அப்பொழுது பூர்வ வாசனையால சிவபக்தி மேலிடப் பெற்று............"பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா" என்னும் பாட்டை முதல்பாடி அருளி ...........அன்று முதல் அன்பு மயமான அற்புத ஞானப் பாடல்களைப் பாடிச் சிவஸ்தலங்கள் தோறுஞ் சென்று வணங்கினர்.

நம்பியாரூரர் பின்னர்ச் சோழ நாட்டில், காவேரி யாற்றங்கரைக்குத் தென்பால் உள்ள திருவாரூரை அடைந்தார். 'திருவாரூரில பிறந்தால் முத்தி' என்பது ஆன்றோர் வாக்கு. திருவாரூர்த் தியாகேசரின் பெருமை! ஆயிரம் நாவாலும் சொல்லுதற்கு முடியுமா?

திருவாரூரில் தேவியரின் சேடியாகிய கமலினி உருத்திர கணிகையர் குலத்திலே பிறந்து மங்கைப் பருவம் அடைந்திருந்தார். அவர் சூடிய பெயர் பரவையார். பரவையார் தினந்தோறும் தியாகேசர் சந்நிதானத்தை அடைந்து—சிவசிந்தையிலே ஆழ்ந்திருந்தார். ஊழ் கூட்டவே சுவாமி தரிசனம் செய்ய வந்த நம்பியாரூரர் பரவையாரைக் கண்டு பரவசம் ஆனார். மெய் சோர்ந்து................ "கற்பகத்தின் பூங்கொம்போ.............அற்புதமோ சிவனருளோ அறியே னென்றதிசயித்து" [illegible]

(தொடரும்)

# சுவேதாசுவதரோபநிடதம்

(திரு. ஐ. பொன்னையா, ஏழாலை)

## முதலாம் அத்தியாயம்

(முற்றொடர்)

(ரு) பஞ்சஸ்ரோதோம்பும் பஞ்சயோந்யுக்ரவக்ராம் பஞ்சப்ராணோர்மி பஞ்சபுத்யாதி மூலாம் । பஞ்சாவர்தாம் பஞ்சது:கௌகவேகாம் பஞ்சாஶத்பேதாம் பஞ்சபர்வாம தீம:

இ-ள். பஞ்சஸ்ரோதோம்பும்-ஐந்து வழிகளாற் பாயும் தண்ணீரையுடைய தாயும், பஞ்சயோந்யுக்ரவக்ராம்-ஐந்து காரணங்களால் உக்கிரமும் வக்கிரமுமுடையதாயும், பஞ்சப்ராணோர்மி-பிராணன் முதலிய ஐந்துவாயுக்களாலுண்டாகும் அலைகளையுடையதாயும், பஞ்சபுத்யாதி மூலாம்-புத்தி முதலிய ஐந்து மூலங்களையுடையதாயும், பஞ்சாவர்தாம்-ஐந்து நீர்ச்சுழல்களையுடையதாயும், பஞ்சது: கௌகவேகாம்-ஐந்து துக்கங்களாகிய பிரவாகத்தின வேகத்தையுடையதாயும், பஞ்சாஶத்பேதாம்-ஐம்பது பேதங்களையுடையதாயும், பஞ்சபர்வாம்-ஐந்து சந்துகளை (படிகளை) யுடையதாயும் (உள்ள ஒரு நதியாகச் சீவான்மாவை), அதீம:- நாங்கள் கண்டோம்.

கு-பு. க. பஞ்சஸ்ரோத: அம்பு- ஐந்துவழிகளாற் பாயும் தண்ணீர். ஐந்துவழிகளாவன; மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஞானேந்திரியம் ஐந்து. ஆன்மாவின் ஞானசத்தி புறத்திலுள்ள விடயங்களை அறிதற்கு வாயில்களாதல் பற்றி இவை நீர்பாயும் கால்வாய்களாக உருவகப்படுத்தப்பட்டன.

(உ) பஞ்சயோநி:- ஐந்து காரணங்கள்- அவை:- சத்தம, பரிசம், உருவம், ரசம், கந்தம் என்னும் தன்மாத்திரை ஐந்து. இவை சூக்குமபூத மென்றும மகாபூதம் என்றும் கூறப்படும். ஆன்மாவின் ஞான சத்தி கிரியாசத்திகளின் தொழிற்பாட்டிற்கு வலிசெய்து உடனிறறல் பற்றியும், விடய வடிவாகிய தூல பூதங்களின் தோற்றரவிற்குக் காரணமாதலபறறியும் இவை சீவநதியின் உக்கிரவக்கிரங்கட்குக் காரணம் எனப்பட்டன. உக்ரவக்த்ராம் என்றும் பாடம்-வக்த்ரம்- முகம் அல்லது வாய்.

(ங) பஞ்சப்ராண:- பிராணன் முதலிய ஐந்தாவன:- பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன என்னும் பஞ்சவாயுக்கள். சலித்தறத் திரட்டுங் குணமுடைய வாயு ஒன்றே உடம்பினுள் பிராணன் முதலிய ஐவகைப்பட்டு நின்று கடத்தல் ஓடல் எழுதல் இருத்தல் முதலிய தொழிற்பாடுகளுக்கேதுவாதல்பற்றி அவற்றை ஐந்து அலைகளாக அல்லது அலைகளுக்குக் காரணமாகக் கூறிற்று.

(ச) பஞ்சபுத்யாதிமூலாம் புத்தியாதி பஞ்சமூலாம் எனமாறுக. புத்தி முதலிய ஐந்தாவன:- புத்தியும், அதினின்றும் தோன்றிய அகங்காரமும், அதன் சத்துவகுண மிகுதியிற்றோன்றிய மனமும், மனத்தின் விருத்தியாகிய சித்தமும், இவையெல்லாம் தோன்றுதற்குக்காரணமாயுள்ள குணதத்துவமுமென்னுமிவை. பஞ்சதன்மாத்திரையும், ஞானேந்திரிய கன்மேந்திரியங்களும் தோன்றுதற்கிடமாயிருத்தல் பற்றியும், இந்திரியங்களால நிருவிகற்பமாயறிந்த விடயங்களை இது இன்னது என்று நிச்சயித்தலாகிய சவிகற்ப உணர்வுபிறத்தற்கிடமாய்ப் பின்னர் அவ்வவ் விடயவடிவாய் நின்று ஆன்மாவிற்குப் போக்கியமாதற் சிறப்புப்பற்றியும் புத்தி முதலிய அவ்வைந்தும் நதிமூலங்களாக உருவகஞ் செய்யப்பட்டன.

(ரு) பஞ்ச ஆவர்தாம்-ஐந்து நீர்ச்சுழல்கள், அவை:- ஞானேந்திரியமைந்தற்கும் விடயமாகிய சத்தம், பரிசம், உருவம், இரசம், கந்தமென்பன. முன்னர்க்கூறிய சத்தம் முதலிய தன் மாத்திரையைந்தும் ஆகாயம் முதலிய தூல பூதங்களைந்தும் தோன்றுதற்கிடமாயுள்ள அவற்றின் (தூலபூதங்களின்) சூக்கும நிலையாகலின் பெயரொற்றுமைபற்றி இரண்டையும் ஒன்றாகக் கொண்டு மயங்கற்க. ஆன்மாவினறிவு அவ் விடயங்களிலகப்பட்டு ஒன்றைவிட்டொன்றுபற்றிச் சுழலுதலின் அவை நீர்ச்சுழல்களாக உருவகஞ் செய்யப்பட்டன.

(சு) பஞ்சது: க ஓகவேகாம்- ஐந்து துக்கங்களாகிய பிரவாகத்தின் வேகம்; ஐந்து துக்கங்களாவன; கர்ப்பம், ஜன்மம், வியாதி, மூப்பு, மரணம் ஆகிய இவையைந்தினாலும் ஏற்படும் துக்கங்கள். முன்னர்க் கூறிய அஞ்ஞானம் முதலிய பஞ்சக்கிலேசங்களைக் கொள்ளினு மமையும்.

(எ) பஞ்சாஶத்பேதாம்—ஐம்பது பேதங்கள். புத்தியின் குணங்களாகிய தன்மம் முதலிய பாவகமெட்டினுலுளவாகிய சித்தி துட்டி முதலிய பிரத்தியயங்கள் ஐம்பதும் ஐம்பது பேதங்களாம்.

(அ) பஞ்சபர்வாம்-ஐந்துபடிகள். அன்னமயம, மனோமயம, விஞ்ஞானமயம் ஆனந்தமயம் என்னும ஐந்து கோசங்களும் ஐந்துபடிகளாவன.

ஆன்மா சுகதுக்கங்களில் வசப்பட்டிருத்தலால் இசனுகமாட்டான் என்று மேல் இரண்டாம் மந்திரத்திற் கூறியதை மேலுங் காரணங்காட்டி வலியுறுத்தியவாறு.

### திருத்திக்கோள்ளுக

சென்றமுறை வெளிவந்த நாலாம் மந்திரத்தில த்ரிவ்ருதம் என்றிருப்பதை த்ரிவ்ருதம் என்றும் ப்ரயராபி என்றிருப்பதை ப்ரத்யராபி என்றும் திருத்திக்கொள்ளுக.


## பல் வைத்தியம்

### யாழ்ப்பாணம்

பல் வைத்தியம் செய்யவும் கண் பரிசோதனை செய்யவும் தத்துவம்பெற்றவரான திரு. எஸ். சாள்ஸ் பத்திருன அவர்கள் வருஷத்தின் எல்லா மாசங்களிலும் 3-ந் திகதி தொடக்கம் 15-ந் திகதிவரையும் யாழ்ப்பாணம், பெரிய தெரு 43ம் இலக்கத்திலுள்ள வைத்திய சாலையில் கருமம் நடாத்துவார்.

### குருநாகல் கிளைஸ்தாபனம்

மாசத்தின் 20ந் திகதியிலிருந்து 30-ந் திகதி வரையும் குருநாகல் கோட்டுவீட்டுக்கு முன்னுள்ள பல்வைத்திய கிளைஸ்தாபனத்தில் கருமம் நடாத்துவார்,

யாழ்ப்பாணத்தில் அவரிடம் வைத்தியம் செய்விப்போர் முன் ஒழுங்குகள் செய்யவேண்டில் அவருடைய குருநாகல் விலாசத்துக்கு எழுதுதல் நல்லது,

(Mis. 98. 6-8—31.12.43)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்டைத் தமிழரின் சமயம்

திருமயிலை, திருவாளர் சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

(முற்றொடர்)

### பயங்கரமான உருவங்களின் வணக்கம்

### சிவபெருமான் தோலை உடுத்தல்

தாருகாவன இருடிகள் வளர்த்த ஓமகுண்டத்திலிருந்து வெளிப்பட்ட மிருகங்களுள், புலியின் தோலை உரித்துச்சிவபெருமான் தமதுடம்பில் தரித்துக்கொண்டார். கயன் என்னும் யானையின் தோலைப் போர்த்தருளினர். மாயா சம்பந்தமான இவ்வுலகத்தில் யானையாகவும் புலியாகவும் வந்த உருவங்கள் இருடிகளிடத்துள்ள சிற்சத்திகளாகும். அவர்கள் அச்சத்திகளைக்கொண்டு மாயைப்பிரபஞ்சத்தில் சிற்சில காரியங்களை நிறைவேற்றிக்கொள்ளும் வன்மை படைத்தவர்கள். இங்கே குறிக்கப்பட்ட சக்திகள் மாயை சம்பந்தமானவை. அவைகள் யானை உருவமாகவும் புலி உருவமாகவும் இருடிகள் விரும்பியபோது வெளிப்பட்டன. இச்சத்திகளெல்லாம் சிவபெருமானது ஆஞ்ஞா சக்திக்கு அடக்கமானவை யென்பதை இருடிகளுக்கு நன்கு புலப்படும்படி மிருகமாகவந்த அச்சக்திகளின் புறத்தோலையுரித்து ஆடையாக அணிந்துகொண்டனர். அதனால் அவர் சடப்பிரபஞ்சத்திற்கும் சித்துப்பிரபஞ்சத்திற்கும் இறைவன் என்பது பெறப்பட்டது. சிவபெருமானுடைய இச்செய்கையானது அவருடைய அளவுகடந்த ஆதிக்கத்தைக் (சித்துப் பிரபஞ்சத்திலும் அசித்துப் பிரபஞ்சத்திலும்) காட்டுவதோடு அவருடைய சட்டங்களும் விதிகளும் பிறழ்ச்சியுடையனவல்ல என்பதையும் ஒருவராலும் மீற முடியாதென்பதையும் புலப்படுத்துகின்றது. சித்துப் பிரபஞ்சத்தையும் அசித்துப்பிரபஞ்சத்தையும் நடத்தும் பொருட்டுச் சிவபெருமான் சில விதிவிலக்குகளை ஏற்படுத்தியுள்ளார், இவ்விதிகள் அவரது திருவருளேயாயினும் அவைகளைச் சரியானபடி அனுசரித்தால் அவற்றிற்குள்ள பலன்களைத் தாராமற் போகமாட்டா. இதுதான் இயற்கைவிதி அல்லது நியதி என்று சொல்லப்படுவது. இத்தகைய நியதிதான் நமது தற்கால ஆராய்ச்சியாளரை மயக்கத்திற்குள்ளாக்கியது. தாருகாவன இருடிகளும் இம் மயக்கத்தின்பாற்பட்டவர்களே. ஏனெனின், அவர்கள் நியதியை அனுஷ்டித்தார்களேயொழிய அந்நியதியை உண்டாக்கின இறைவனை மறந்தனர். நமது தற்காலநிலையில் நாம் கடவுளைக் காணக்கூடிய சக்தியுள்ளவர்களாயுள்ளோம். ஆதலால் யாம் வசிக்கும் இப்பிரபஞ்சத்திற்கிறைவ அவர் சில சட்டதிட்டங்களை ஏற்படுத்தி நம்மை அவற்றிற்குள்ளாக்குகின்றனர். அவை நமது நன்மையை நாடியவையே. இத்திட்டங்கள் அமைக்கப்படாதொழியின் நமது பிரபஞ்ச வாழ்க்கை இல்லாதொழியும். இயற்கை விநோதங்களையும் அவைமூலமாகக் கடவுளின் அருட்செய்கையையும் யாம் ஒருசிறிதும் அறிய முடியாது. இயற்கைச் சட்டங்களும் முறைகளும் சாசுவதமானவை, அவற்றை மாற்றவும் குறைக்கவும் ஒருவராலும் ஆகாது. தாருகாவன இருடிகள் இயற்கை விநோதங்களிலும நியதிகளிலும் நன்கு தேர்ந்தவர்கள், அனுஷ்டான முறையில் இயற்கைச் சக்திகள் அவர்கள் கைவசப்பட்டிருந்தன. ஊழ் வலியால் அவர்கள் இச்சக்திகள் எங்கிருந்து உண்டாயின என்பதை அறியாதொழிந்தனர். அவர்கள் மயக்க அறிவை நீக்கி நற்புத்தி புகட்டச் சிவபெருமான் கருணை புரியலாயினர். அவர்கள் அனுஷ்டானத்திற் கைவந்த சிற்சத்திகள் பரமேசுவரனுக்கு அடக்கமானவையென்பதையும் அவர் ஆணையைக்கடந்து அவை நிலைபெறா என்பதையும் அவர்களுக்கு மெய்ப்பிக்க வேண்டியது அவசியமாயிற்று. ஆதலால் இச்சத்திகளின் வெளிப்போர்வையைநீக்கி இருடிகளின் மயக்க அறிவை ஒருவாறுதிருத்த முயன்றனர். இதை எல்லோரும் அறிந்து உய்யும்பொருட்டு இம் மேற்போர்வையைத் தாமே உடுத்திக்கொண்டனர். இப்படிச் செய்ததைப்பயங்கரத் தோற்றமென்று சொலவது ஏற்புடைத்தா? அது நல்ல பொருளைத் தரக்கூடியதல்லவா? நமது அரசர் கொல்லவந்த புலியொன்றைச் சுட்டுக்கொண்டு அதன் தோலைத் தமது வீரச்செயலுக்கு அறிகுறியாக தமது மாளிகையில் தொங்கவிட்டு வைத்தால் அதைக் கோரச் செய்கையென்று சொல்லலாமா? அதை நற்செய்கையென்றே கருதல் வேண்டும். தாருகாவனத் திருவிளையாட்டு சடப்பிரபஞ்சத்தைமட்டும் சார்ந்ததன்று. சித்துப் பிரபஞ்சத்தையும் ஒட்டியது. அத்திருவிளையாடல் தத்துவப் பொருளையும் உள்ளடக்கியதாகும். இந்நுண்ணிய பொருளைத் தேர்ந்து அறியக்கூடாதவர். வெளித்தோற்றத்தால் மருண்டு இடர்ப்பட்டுப்பயங்கரச் செயலென்று கூறியொழிகின்றனர். இவ்வளவோடமையாது சிவன் தோற்றங்களை அணிந்துகொள்ளும் பூர்வீக மனிதனென்றும் புகல்கின்றனர். நவீன ஆராய்ச்சியால் ஏற்பட்ட புதுப்பாடம் இதுவாகும். இது ஆராய்ச்சிக்குறைவால் உண்டானதென்றே சொல்லவேண்டும். இன்னோரன்ன ஆராய்ச்சியால் கெடுதியே உண்டாகின்றது.

ஒருவனுடைய உடம்பைத் தோலால் மூடுவது அருவருக்கத்தக்கதே. ஆனல் அருவருப்பு ஏன் என்பது கேள்வி, உத்தரம் தோலில் அழகில்லையென்பதாம். சிவபெருமான் அத்தோலை அழகுள்ள பொருளாகக் கொண்டனரா? தோலைத் தரிப்பதனுல் தமக்கு அழகுண்டாமென்று நினைத்து அங்ஙனம் போர்த்துக்கொண்டாரா? புராணக்குறிப்பில் இவ்வருட்செய்கைக்கு நுணுக்கமான பொருள் கூறப்பட்டுள்ளது. இந்நுண்ணிதான சிறந்த பொருளை விலக்கி வெளிப்பொருளைக் கொள்ளுவது உசிதமா? வெண்மையாய்ப் பிரகாசிப்பதெல்லாம் வெள்ளியாகுமோ? புராணங்கள் குறிப்பிட்ட காலம் மனிதர்களுக்கு பஞ்சு பட்டு உடைகள் தெரியாத காலமென்று சொல்லுவோமா? அக்காலத்தில் மனிதர்கள் தோலையும் மரப்பட்டையையும், இலைகளையும் துணிக்குப் பதிலாக அணிந்துகொண்டிருந்த காலமென்று கூறுவோமா? சிவபெருமானே பட்டுப் பீதாம்பரங்களை உடுத்திருப்பதாகத் தெரியவருகிறது. அவருடைய கைலாயமலையில பஞ்சினாலும் பட்டினாலுமாய பல கொடிகள் பறக்கவிடப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகின்றது. வேதங்களிலேனும் புராணங்களிலேனும் சிவபெருமான் தோலுடையைத் தரித்த புராதன மனிதர்களால் வணங்கப்பட்டவராகவேனும் அக்காலத்தவராகவேனும் யாண்டுங் கூறப்பட்டில. சிவபெருமானைச் சேர்ந்த கணங்களும் தோலாடை தரித்தவர்களாகவும் தெரியவில்லை. ஆனல் பண்டைய நூல்களில் சிவபெருமான சிறந்த குணசீலர்களாகவே குறிப்பிடப் பட்டிருக்கின்றனர். இச்சிறந்த குணங்கள் பூர்வீக மனிதர்களிடத்தில்லாதவையே. வேதங்களிலும் புராணங்களிலும் தேர்ந்த முனிவர்கள் புராதன மனிதனை ஒருபோதும் சிவபெருமானுகக்கொண்டிருக்கமாட்டார்கள். அவருடைய தோலாடையே பழந்தமிழர்களின் உடையாக இருந்தால் அதற்குச் சித்துப்பொருள் ஒருபோதும் கற்பித்திருக்கமாட்டார்கள். தோலாடை நுண்ணிய பொருளையுடையமையினலன்றோ அதனை அங்கீகரிக்கலாயினர். யான் முன்னர்ப் பலதரம் கூறியபடி தோலாடை நுண்ணிய பொருளைப் பயப்பதே. நமது லௌகீக அறிவுக்கு அது சரிப்படாமையால் அதனை யாம் கண்டித்துப் புறக்கணித்தல் கூடாது.

சித்துப்பிரபஞ்சத்தில் ஈடுபட்டவர்கள் சடப்பிரபஞ்ச அழகைப்பொருட்படுத்தார். இச்சடப்பிரபஞ்சப் பொருட்பற்றைச் சிறிது சிறிதாக விட்டொழிக்க முயல்வர். சில சமயங்களில் சடப்பிரபஞ்சத்திலுள்ள அழகற்ற பொருள்களையும் ஆசிரிப்பர். இதனாலன்றோ நமது மகரிஷிகள் தனியாகச்சென்று காட்டிலும் குகையிலும் வசிக்கலாயினர். அங்கே தோலையும் மரவுரியையும் ஆடையாக அணிந்தனர். காய் இலை சருகு முதலிய பொருள்களை உண்டு காலங்கழித்தனர். உலகத்தை வெறுத்து காட்டிற் சந்நியாசியாக வசித்த இத்தகைய மனிதர்களின் பழக்கவழக்கங்களைக்கொண்டு யாம அக்காலத்து நாகரிகத்தை நிர்ணயிக்க முயல்வோமானல் அது மதியீனமாகும். ஒரு வயித்தியர் தனது நோயாளிக்குச் சத்திர சிகிச்சைசெய்தால் அவரை இரக்கமில்லாதவர் என்று கூறலாமோ. ஆதலால் எதையும் சீர்தூக்கி ஆராயாமலும் அக்கால சந்தர்ப்பங்களை நோக்காமலும் அனுமதித்தல் கூடாது. இக்கால ஆராய்ச்சியாளர் இதனை முக்கியமாக அவதானிக்கவேண்டியது. சமய சம்பந்தமான விஷயங்களில் அதிசாக்கிரதையாக இருக்கவேண்டியது அவசியம்.

### காளி—கோரரூபம்

காளியும் துர்க்கையும் உமாதேவியின் முகூர்த்தங்கள். காளி, துர்க்கை என்னும் பெயருள்ள சிறுதெய்வங்களும் உள. அவை உமாதேவியோடு ஒப்பிடத்தக்கவையல்ல. உமாதேவியார் நமது உலகமாதா. இவ்வுலகமாதாவே கடவுளின் அருட்சக்தியாகும். உமா என்பதன் பொருள் அறிவு. உயிரைப் பிரகாசிக்கச்செய்யும் கடவுளின் அருட்சக்தியே உமாதேவியாம்.

பண்டைத் தமிழர்கள் கடவுளின் அருட்சக்தியின் இலக்கணத்தை நன்கு அறிந்தவர்கள். அவர்களுடைய சமய நூல்கள் இதனை நன்ருய்த் தெளிவுபடுத்தும். இம்மாயா சம்பந்தமான உலகத்திலகடவுளின் அருட்சக்தியைத் தாய்மையைவிட வேறு வழியாகப் புலப்படுத்த இயலாது. இத்தாய்மை நமது சமயத்தின் தூய்மையைக் காட்டுகின்றது. கடவுளின் அருட்சக்தியைத் தந்தையாகவும் குமாரனுகவும் ஒப்பிடுதல் சாலாது. தாயே சரியான உபமானம். தாயின்றித் தகப்பனுமில்லை புதல்வனுமில்லை.

(தொடரும்)

விளம்பரமின்றேல் பெரும்பணமில்லை

## ஸ்ரீ முன்னேஸ்வரத்தில் மகோற்சவம்

ஸ்ரீ முன்னேஸ்வர க்ஷேத்திரத்திலே திருக்கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் சர்வாபீஷ்டவரத ஸ்ரீவடிவாம்பிகா சமேத முன்னைநாதஸ்வாமிக்கு நிகழும் சுபானு வருஷம் ஆவணி மாசம் 1-ம் திகதி செவ்வாய்க்கிழமை (17-8-43) துவஜாரோஹணமாகி உற்சவங்கள் நடைபெறுகின்றன.

விசேஷக் குறிப்புகள்

பிக்ஷாடனர் திருவிழா: ஆவணிமீ 24-ந் திகதி (9-9-43) வியாழக்கிழமை, நடேசர் திருவிழா: ஆவணி மீ 25 ந் திகதி(10-9-43) வெள்ளிக்கிழமை, வேட்டைத் திருவிழா: ஆவணி மீ 26 ந் திகதி (11-9-43) சனிக்கிழமை, தேர்த்திருவிழா: ஆவணிமீ 27 ந் திகதி (12-9-43) ஞாயிற்றுக்கிழமை, தீர்த்தத் திருவிழா: ஆவணிமீ 28 ந் திகதி (13-9-43) திங்கட்கிழமை.

## சுந்தரமூர்த்தி நாயனர் வாழ்க்கை வரலாறு

3-ம் பக்கத் தொடர்ச்சி

முன்னே தோன்றினவர், "முருகனே, மாரனே, மெய்யருள் பெற்றுள்ளவனே" என மனம் திரிந்து நின்ருர் பரவையார். வான்மீகாரங்ய பெருமானுக்கே தமது காதற் கவலையைச் செப்பினர் நம்பியாரூரர். பெருமான் அவர்மீதும் பரவையார் மீதும் இரக்கம் கொண்டு, காட்சி கொடுத்து, அடியார்களுக்கு இவ்விரு சிவ அடியார்களையும் விவாகஞ் செய்து வைக்கும்படி ஆஞ்ஞாபித்தருளினர். விரும்பியவாறும் விதிப்படியும் விதித்தபடியும் விவாகம் இருவருக்கும் செய்து வைத்தனர் சிவனடியார்.

6 பரவையாருடன் சுந்தரர் வாழ்ந்து வரும் நாட்களில் ஒரு கால தியாகேசர் சந்நிதியிலே, தேவாசிரியன் என்னும் ஆயிரங்கால் மண்டபத்திலே விபூதி, உருத்திராட்சம் அணிந்த பெரியார்களாகிய அங்குள்ள சிவனடியார்களைச் சுந்தரர் கண்டு உளம் பூரித்து அன்னரின் பெருமையை எடுத்துரைக்கப் பேரபிமானங் கொண்டிருந்தார். ஒரு நாள் வன்மீகநாதன் தம்து தோழனுகிய சுந்தரருக்கு அச்சிவனடியார்களின் பெருமையை எடுத்துரைக்கும்படி பணித்து 'தில்லைவாழ் அந்தணர்க்கும் அடியார்க்கும் அடியேன்' என்னும் முதல அடியைத் திருவாய் மலர்ந்தருளினர். சைவச்சிகாமணியாகிய சுந்தரர் திருத்தொண்டத்தொகை என்னும் நூலை எடுத்தருளினர். அந்த நூலின் பெருமை அளப்பரிது.

7 சுந்தரர் பரவையார் வீட்டில் தங்கியிருக்கும் பொழுது குண்டையூர்க் கிழவர் என்னும் வேளாளர் சுந்தரருக்கு நெலலும் பருப்பும் வழக்கமாக அனுப்பியிருந்தார். அக்காலத்திலே மழையில்லாமல வளம் சுருங்க, நெல் அனுப்ப இயலாமல் தவித்துக் கொண்டு வெகு கவலையுடன் போசனம் பண்ணுமல் நித்திரை கொண்டார் குண்டையூர்க்கிழவர். சிவபெருமான சொப்பனத்தில அந்த வேளாளருக்குத தோன்றிச் சுந்தரனுக்கு அனுப்பும்படி உனக்கு நெல்லுத் தந்தோம்" என்று சொல்லியருளினுர். விடியற்காலையில் வீட்டில நெனமலை இருந்தது. ஓடோடி அவர் சுந்தரருக்குச் சென்று அறிவித்தார். நாயனர் வந்து பார்த்து, இந்த நெல்லைப் பரவையார் வீட்டுக்கு அனுப்பியருள வேண்டும்—என்று தேவாரம் பாடி, வேண்டி நின்ருர். அவ்வாறே பரவையார் வீட்டில் மாத்திரமன்று, திருவாரூரில் ஒவ்வொரு வீட்டிலும் நெனமலைகள் காணப்பட்டன. சிவபிரானின் அற்புதக் கருணைதான் என்னே!

—வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷ விரத மான்மியம்

(ம. வே. தி. ச.)

(முற்றொடர்)

தருமகுத்தன் மீண்டு போகும் மார்க்கத்திலே, மூத்தோனாய சுசி விரதனைக்கண்டு அவனுக்கு நிகழ்ந்தவற்றையெல்லாம் ஆதியோடந்தமாகச் சொல்ல, அவன்கேட்டு ஆநந்தமடைந்தான்; பின்னர் இரு சகோதரருங் கூடிக்கொண்டு தாயின் இல்லத்தை யடைந்தனர். தங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தாயாகிய உமைக்குத் தருமகுத்தன் நடந்த வரலாறு முழுவதையும் அப்படியே சொன்னான். தாய் கேட்டு அளவில் மகிழ்ச்சியடைந்து தெய்வத்தின் திருவருளைப் பாராட்டினாள். தருமகுத்தன் விதிப்படி சிவபூசை செய்து தங்களைக் காத்தருளவேண்டுமென்று இறைவனை வேண்டினான். அடுத்த தினம் தாயிடம் அநுமதிபெற்றுக் கொண்டு அந்தப் பூஞ்சோலையை அடைந்தான்.

அங்கே அஞ்சுமதி தன் தந்தையுடன் வந்திருப்பதைக்கண்டு உளளம் பூரித்தான். அவனுடைய வரவைக் கண்ட அஞ்சுமதியும் அவளுடைய தந்தையும் எதிர்சென்று அவனை யழைத்து உபசரித்தனர். அஞ்சுமதி "பிராமணேசா, இவர்தாம் உமது மாமனார்" என்று தன் நாயகனுக்கு விநயமாக உரைத்தலும் அவன் தன் மாதுலனை வணங்கினான். மாதுலனும் தன்னுள்ளங் களிகூர அவனைத் தழுவிப் பக்கலில் இருக்கச் செய்து "அரசிளஞ் சிங்கமே, நீ என் அருந்தவப்புதல்விக்கு வாய்க்கப்பெற்றமை நான் செய்த புண்ணியத்தின பயன்போலும், நீவிர் இருவிரும் நீடூழிவாழ்க" என்று ஆசி கூறி அவனைத் தன்பக்கலில இருக்கச்செய்து பின்வருமாறு சொலவாயினன்:-

"மருகோனே, அரிபிரமேந்திராதிதேவர் அனை அநுதினமும் பூசித்துத் தரிசனஞ்செய்தற்கு இடமாகவிளங்குங் கைலாயகிரிக்கு நானும் நேற்றைத்தினஞ் சென்று பெருமான் சந்நிதியில் என்திருத்தொண்டைச் செய்து வணங்கினேன்; அந்தச்சமயத்தில், கண்ணுதற்கடவுள், அடியார்க்கெளியன், கருணைவாரிதியாக கைலாசபதி தமியேனைக் கடைக்கணித்து, அரசிளங்குமரனே, உனது தாய்தந்தையர் இறந்த வரலாற்றையும், அதன்பின் நீ உமையென்னும் பிராமணப் பெண்ணிடம் வளர்ந்த செய்தியையும், சாண்டில்ய முனிவர் உங்கட்கு உபதேசஞ் செய்ததையும், நீ சிவவிரதங்களுட் சிறந்ததாகிய பிரதோஷ விரதத்தை அநுட்டித்துத் தம்மைப் பத்தியோடு பூசித்து வரும் விசேடத்தையும் தமியேனுக்குக் கூறியருளி, தமியேன் பெற்ற இப்புதல்வியை உனக்கு மணஞ் செய்துவைத்து உன்பிதா இழந்தநாட்டினையும் பகைவரிடமிருந்து மீட்டுக் கொடுத்தற்குத் துணைபுரிந்து அந்நாட்டிற்கு நின்னையே அரசனாக்கி வைக்கும்படியுங் கட்டளையிட்டருளினார். சிவவாக்கைச் சிரமேற்கொண்டு அப்பெருமானை மீளவும் வணங்கி ஆநந்தமடைந்தேனாய் என் மாளிகைக்கு மீண்டேன். மீண்டுவந்த விடத்து என்புதல்வி நின்வரலாற்றைத்தையுஞ் சொல்லி நினக்குந் தனக்குமிடையே நிகழ்ந்த காந்தர்வ மணத்தின் சிறப்பையுஞ் சொன்னாள்; கேட்டநான "சிவனருள் பெற்றார்க்கெய்திடாப் பொருளுமொன்றுண்டோ" என்று சிந்தைமகிழ்ந்து, என் தநயையுடன் இங்கு வந்தேன, நின்னைக்கண்டேனே; எலலாம் தெய்வசங்கற்பத்தின் வழியே நடக்கலாயின. என் புதல்வியை உனக்கே தத்தஞ்செய்து தருகின்றேன்' என்று திரமிஷன் விதிப்படி தத்தஞ் செய்தான். தன்மகளுக்குரிய ஆடையாபரணாதிகளையும் சேடியர் முதலாம் வரிசைகளையும் அக்கந்தர்வன் வழங்கினான். தனது மருகனாகிய தருமகுத்தனுக்கு நால்வகைச் சைநியங்களையும் பலவகைப் படைக்கலங்களையும் உதவி "என் மகட்கு வந்த மணாளனே, இப்படைத்துணையைக் கொண்டு பராசுராமனையொத்த வீரத்துடன் சென்று உங்கள் நாடுநகரைக் கவர்ந்த வேற்றரசரோடு சமர்புரிந்து அவரை வென்று உங்கள் நாட்டைப் பழையபடி பெற்றுப் பரிபாலிப்பாயாக. அங்ஙனம் நீடித்தகாலம் நீதியோடு அரசாண்டபின் உங்களிடத்திற் பிறக்கும் மைந்தனிடம் இராச்சிய பாரத்தை ஒப்புவித்தபின்னர் நீவிர் இருவிரும் கைலாயத்தையடைவீர்களென்பது சிவ ஆஞ்ஞை" என்றான். அவன் சொலலியவற்றையெல்லாம் கேட்ட தரும குத்தன் அற்புதமடைந்தானாய் அவனை வணங்கினான. அஞ்சுமதி தன் பிதாவின முன்னிலையிற் பஞ்சாங்கமாக விழுந்து வணங்கினாள். பிரிவாற்றாது வருந்தும் மகளுக்குத தேறுதல் வார்த்தைகூறி இருவர்க்கும ஆசிசொல்லி அநுமதி கொடுத்து, திரமிடன் என்னுங் கந்தருவன் தன்னுலகிறகு மீண்டான.

**தருமகுத்தன் தன் அரசு பெற்றமை**

மேலே சொல்லப்பட்ட பேறுகளையெல்லாம பெற்ற தருமகுத்தன் தன் தேவியோடும் நாலவகைச் சைநியத்தோடும தன்னை வளர்த்த தாயாகிய உமையும் தமையனும் இருக்குமிடத்தைச் சேர்ந்து தாயிடத்து அநுமதி பெற்றுக்கொண்டு, அவ்விடம் விட்டகன்று விதர்ப்ப நாட்டின் எல்லையை யடைந்தான். நாட்டின் எல்லையில தமக்கென ஒரு தானத்தை வகுத்துக் கொண்டு அங்கு நின்று, தன் பிதாவின் நாட்டைக் கவர்ந்து பரிபாலிக்கும் பகையரசரிடம்தனது ஒற்றரை விடுத்தான். சென்றஒற்றர் பகையரசரைக் கண்டு "நாங்கள் விதர்ப்பநாட்டுக்குரிய இளவரசனாகிய தருமகுத்தன விடுத்த தூதுவராவேம்; தம பிதாவிடம் நீவிர் கவர்ந்தாளும் நாட்டைச் சமாதான முறையில் தனக்குக் கொடுக்க உங்களுக்கு இஷ்டமோ, இல்லையேல் தனனிடத்திலுள்ள சதுரங்க சைநியத்தின் பெருமவலி கொண்டு உங்களுடன் எதிர்த்துச் சமர்புரிந்து தோலவியுறச்செய்து நாட்டைத் தான் மீட்டுப் பெற்றுக்கொளவது உங்களுக்கு இஷ்டமோ, எது உங்கள் நோக்கமென்பதை உங்களிடம கேட்டறிந்து வரும்படி எங்கள் இராசகுமாரன் எங்கட்குப் பணித்தான்; ஆனதால் வந்தோம்" என்றார்கள்.

ஒற்றர் உரைத்த வார்த்தையைக் கேட்ட பகையரசர் பெருஞ் சிரிப்புச் சிரித்து, "இந்தக் கணமே நாங்கள் யுத்தத்திற்குப் புறப்படுகின்றோம்" என்று பெருஞ்சீற்றமுற்றாராய்த தனித்தனி தங்கள் சதுரங்க சைநியத்துடன் விதர்ப்பநாட்டு எலலையில் நிற்கும் தருமகுத்தனையும் சைநியத்தையுஞ் சென்று எதிர்த்தார்கள் பெருஞ் சமர் மூண்டது. சிவபூசாபலத்தனாலும் பிரதோஷ விரதத்தை விதிப்படி அநுட்டித்த மகத்துவத்தினாலும் தருமகுத்தன் பகைவருட் பலரைக் கொன்று சிலரைப் புறங்கண்டு வெற்றியடைந்தான். பகையரசர் மாண்டும புறங் கொடுத்தும் போனதைக் கண்டு விதர்ப்பநாட்டுள்ள சனங்களும் பழைய மந்திரிமார் சேனாபதிகளானோரும் தங்கள் அரசகுமாரனையும் தேவியையும் எதிர்கொண்டழைத்து அரசமாளிகையிற் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். ஒரு சுபநாளில் தருமகுத்தனுக்கு முடிசூட்டி அவனது தனி மதிக்குடை நீழலில் இனிதிருந்து வாழ்வாராயினர். தருமகுத்தன் பிரதோஷவிரதமநுஷ்டித்தல் சிவார்ச்சனை செய்தலாகிய மேலான நியதிகளை எக்காலேயும் மறந்தானலலன். இங்ஙனம நீடித்தகாலம் நீதியோடு இராச்சிய பரிபாலனஞ்செய்து தருமகுத்தனும் கற்பிற் சிறந்த அவன தேவியாகிய அஞ்சுமதியும் தம் புதல்வனிடம் இராச்சிய பாரத்தை ஒப்புவித்துக் கைலாசபதியின் திருவடி நீழலை யடைந்தார்கள். உமையும் அவள் புதல்வனாகிய சுசிவிரதனும் தாமகள இப்பிரதோஷ விரதத்தை யநுட்டித்த புண்ணியத்தினால் தங்கள் அந்திய காலத்திற சிவகதியை யடைந்தனர். (வரும்)

[இவ் விஷயத்தின் முந்திய பாகங்களில் "தருமதத்தன்" என வந்தவற்றைத் தருமகுத்தன் எனத் திருத்திக்கொள்க.]

## திருப்பூவணநாதருலா

2ம் பக்கத் தொடர்ச்சி

ஆகிய இப்பகுதிகளில் எழுந்தருளிய பிரான் தேவர் நெருங்கத் திருத்தேரிற் பவனி வருதலைத் திருச்சின்னங்கள் இசைத்தன. பாவையும் அன்னை முன்செல்லப் பின்சென்று அவள் கரங்களை முன் குவிக்கத் தானும் பின்குவித்து அவள் துதிக்கத் தானுந் துதித்து நின்றாள். பின், கைத்தாயைப் பார்த்துச் "சோகிமிக்க இத்தேரிலேறி வருபவர் யார்? சொல்" என்றாள். கைத்தாயும் 'மகளே, அத்தேரிலிருப்பது, தேவிவளர்த்த தெய்வப்பலாவடியின் மேவிப்பழுத்த வியன் கனி" என்றாள். "அப்படியானால், அதை எனக்குப் பெற்றுத்தா" என்று காதலோடு கேட்டு அழுது கண்பிசைந்தாள் பேதை. கைத்தாய் (அச்சிறுமகளை நோக்கிச் சொல்லும் பகுதி மிக இனியது; பக்திச் சுவையும் நிரம்பியது.)

—பேதைகேள்
இந்தக் கனியெவர்க்கும் எட்டா
நறுங்கனிகாண்
முந்தப் பழமறையீ மொய்ப்பது
காண்—சந்ததமும்
ஒன்றாய்ப் பலவாம் உருவிற்
பொருந்தியெங்கும்
நன்றாய்ப் புறம்புமுள்ளும் நண்ணுங்
காண்—குன்றாத
பாவு மலையிற் பசுந்தே னுடன்
கலந்(து) அங்(கு)
ஒவில் கருணைரசம் ஊறுங்காண்—
மேவுமன்பர்
உள்ளத் தினிக்குங்காண் ஓர்பொன்
னனையாட்குக்
கிள்ளப் பழுத்துக் கிடக்குங்காண்—
விள்ளும்
பெரிய முகுந்தப் பிரமா தியர்க்கும்
அரிய பழங்காண் அணங்கே—
பரிவகல்நீ" என்றாள்.

(இவ்வடிகளில் வரும் "இந்தக் கனி" எனத் தொடங்கும் அடி "அளிவளருள்ளத் தானந்தக்கனி" என்பதனோடு ஒப்புநோக்கி மகிழற்பாலது. மறையீ—மறையாகிய ஈ) என்னும்போது இரதத்தின்மீதிருந்த கருணைப்பழம் அவ்விடத்தை விட்டு அகன்றது. அன்னையும் "அந்தக் கனி நம் அகத்திலிருப்பது" (அகம்-மனம்; வீடு) என்று கூறி இந்தக் கனியைச் (கன்னியை) கொண்டு ஏகினாள். வந்த மதனும் "என்றுஞ் சிறியார்க்கினியது காட்டார்" என்று தன் வன்றிண்சிலையை மறைத்து அகன்றான்.

மற்றோரிடத்தில், "கரையற்ற பெண்மைக் கவின் சிறிது காட்டும்" உருவத்தை யுடையாளும், பாவையுமை ஆர்த்த சரவணத்திலண்ணலுருக் கூட்டுதல்போற் சேர்த்திருள் கூட்டுங் குழலையுடையாளும், வன்னச்சிறு நடையாளும், கன்னிக் கொலை சிறிது கைவந்தாளுமாகிய பெதும்பை (8-11) யொருத்தி தன்பருவ மாதருடன் விளையாட்டயர்வாளாயினாள். (இப்பருவவர்ணனையின் விரிவை 205-ம் கண்ணி தொடக்கம் 221ம் கண்ணி வரையுள்ள பகுதியிற் காண்க) இறைவனும் தேவாரம் பாடிய மூவரும், மணிவாசகப் பெருமானும், அந்தாதிபாடிய அம்மையும், அற்புதத்திருவந்தாதி தந்த சேரமான் பெருமாணாயனாரும், பெண்பாகங்கொண்ட பிரானாகிய சிவபிரான் எழுந்தருளியுள்ள பதிகள் தோறும் கேத்திரத் திருவெண்பா வென்னும் வெண்பாவினாற் புகழ்ந்த வேந்தனாகிய ஐடிகள் காடவர் கோனும், பரமனையே பாடுவாரும், திருவிடைமருதூர் மும்மணிக் கோவை சொன்ன மூர்த்தியாகிய பட்டினத்துப்பிள்ளையாரும் பிறரும் சூழ்ந்துவரத் திருவீதியிற் சார்ந்தான். சார்ந்தவனை மையற் செபல் சற்றறியும் விழியாளாகிய அவள் சேயிழையாரோடும் எதிர்போயிறைஞ்சினாள். இறைஞ்சிக் கயிலைக்கிரிக்குளமர்ந்த பிரானாகிய அவனுடைய கேசாதிபாதப் பரப்பினழகையெல்லாம் பார்த்தாள். அவன்றன் கபோலத்தில் விளங்கியகாயத்தைக் கண்டாள். பக்கத்தில் நின்ற மடவாரை நோக்கி, "தேவர் கபோலத்திருந்த குறி என்னகுறி" என்று கேட்டாள்.

## பிரெஞ்சு மக்களுக்குப் பரிபாஷையிற் செய்தி

லண்டன் ஆக 19—

பிரிட்டிஷ் ராணுவத்தைச் சேர்ந்த அதிகாரி யொருவர் இன்றிரவு ரேடியோவிற் பிரெஞ்சு மக்களுக்குச் செய்த பிரசங்கமொன்றிற் கூறியதாவது:—

"ஜே" தினத்தில் 'எச்' மணிக்கு ஆவர்களின் சேவை தேவைப்படுமென்பதை உங்களிடையேயுள்ள சத்துரு எதிர்ப்புக் கோஷ்டிகளைச் சேர்ந்தவர்கள் அறிவார்கள்.

## நகரின் வடபகுதிக்கு ஆஸ்பத்திரி

கொழும்பு வடபகுதியில் ஆஸ்பத்திரியொன்றை அமைப்பதுபற்றி ஆலோசிக்கும் பொருட்டுச் சுகாதாரப் போக்குவரத்து மந்திரிமாரும் கொழும்பு மேயரும் சமீபத்தில் மகாநாடு கூடுவர்.

இதற்காக நகரசபை 'புளுமெண்டல்' ரோட்டிலுள்ள மூன்று ஏக்கர் காணியொன்றை நன்கொடையாக உதவியிருப்பதாகத் தெரிகிறது.

**இனும் ரூபா 5**

காங்கேசன்துறை ரோட் 342ம் இலக்க வீட்டைச் சேர்ந்த 12 கூப்பன்கள் தவறிவிட்டன. அனுப்பிவைப்போருக்கு இனும் ரூபா 5 கொடுக்கப்படும்.

A C/o இந்துசாதனம்.

(Mis. 104. 23.8.43)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடைவுநகை ஏலவிற்பனவு

1940ம் ஆண்டு வைகாசிமாசம் 23ந் திகதி தொடக்கம் 1942ம் ஆண்டு வைகாசிமீ 10ந் திகதிமுடிய, வட்டுக்கோட்டை மேற்கு லைசென்சுபெற்று அடைவு பிடிக்கும் கா. செ. இராசதுரை யென்பவரிடம் அடைவு வைக்கப்பட்ட நகைகள் இப்போது தவணை தப்பியபடியால் சட்டப்பிரகாரம், 1943-ம் ஆண்டு ஆவணி மீ 25-ந் திகதி (10.9.43)வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகைமிறநீங்கலாக மிருதி ஷியார் வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

V. S. Ambalawarner,
Auctioneer

Mis 105 23&26-8-43.


## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத் தட்டு)

### செவ்வாய் ஆகஸ்ட் 24

காலை 7-45 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 திரைகானம் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 என். வி. ஜானகிராம பாகவதர் பாட்டு 9 முடிவு.

1 கதம்பம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 திருகோகர்ணம் சுப்பிரமணியய்யர் வீணை 2 தமிழில் செய்திகள் 2-30 முடிவு.

மாலை 5 திருகோகர்ணம் சுப்பிரமணிய ஐயர் வீணை 5-45 இசைப்பயிற்சி 6 திருச்சி வாத்ய கோஷ்டி 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராமநிகழ்ச்சிகள் 7-15 நாழும் யுத்தமும் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 இந்தியா நோக்கி 8 மைசூர் டி. சௌடையா கண்டதேவி அழகிரிசாமி இரு வயலின்கள் 8-15 கண்ணன் தேவி † 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.45 மணிரங்கு 10 இசைவேளை † 10-30 முடிவு.

### புதன் ஆகஸ்ட் 25

காலை 7-44 கீதாரம்பம் 7-50 தமிழில் செய்திகள் 8 கே. ஆர். வி. ராமநாத சாஸ்திரி பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 கே. ஆர். வி. ராம சாஸ்திரி பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே. ஆர். வி. ராமநாத சாஸ்திரி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 திருவாளப்பத்தூர் கிருஷ்ண மூர்த்தி பிள்ளை வயலின் 5-45 இசைப் பயிற்சி 6 மாயாவரம் வி. வி, கிருஷ்ணையர் பாட்டு 6-30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 ரேடியோ பேட்டி 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 திருவாளப்புத்தூர் கிருஷ்ணமூர்த்தி பிள்ளை வயலின் 8-30 அமெரிக்க வாத்து 8-45 மாயவரம் வி. வி. கிருஷ்ணையர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 புல்லாங்குழல் கிளாரினெட் 10 துருப்புகளுக்கு 10-30 முடிவு.

### வியாழன் ஆகஸ்ட் 26

காலை 7-45 கீதாரம்பம் † 7-50 தமிழில் செய்திகள் 8 பாசுரங்கள் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-30 எம் எஸ் ஜகந்நாதம் பிள்ளை பாட்டு 9 முடிவு.

1 கதம்பம் † 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி. கே. நாகரத்னம்மாள் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை 5 டி. கே. நாகரத்தினம்மாள் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 6 எம். எஸ். ஜகந்நாதம் பிள்ளை பாட்டு 6.30 ஆங்கிலத்தில் செய்திகள் 6-40 கிராம நிகழ்ச்சிகள் 7-15 செய்தி விளக்கம் 7-30 அறிவிப்புகள் 7-35 தமிழில் செய்திகள் 7-45 டாக்கி இசை † 8 எம். கே. கனகாம்புஜம் பாட்டு 9 இந்துமதி 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 வெற்றி மார்க்கம் 10 ஐரோப்பிய சங்கீதம் † 10-30 முடிவு.

## தேவாலயங்களும் அவற்றிற்சூறையாடலும்

இக்கலியுகத்தில், தருமதேவதை நான்கு கால்களையுடையதா யிருந்தும் ஒற்றைக் காலினால் நடக்கிறது என்று அறிவொழுக்கங்களிற் சிறந்த ஆன்றோர் கூறியிருக்கிறார்கள். அதன் கருத்து அறம் காற்பங்கும் மறம் முக்காற் பங்கும் நடக்கின்றதென்பதே. இது யாவரும் மறுக்கொணாத ஒருண்மையாகும். இதற்குத் திருஷ்டாந்தமாக இப்போது நடக்கின்ற உலகயுத்தமும் அதன் காரணமாக நிகழ்கின்ற ஏனையதீமைகளும் பிறவுமாம். பஞ்சம், நோய், வறுமை முதலிய பல துன்பங்கள் சனசமூகத்தை வருத்துகின்றன. இவைகளேயன்றி யாழ்ப்பாணவாசிகளாகிய நாம் — விசேஷமாய்— சைவசமயிகளாகிய நாம் இன்னும் ஓர் ஆற்றொணுத் துன்பத்தினால் இடைக்கிடை வருந்தவேண்டியிருக்கிறது. இத்துன்பசம்பவத்தைக் காணவும் கேட்கவும் எங்களுக்கு மனக்கொதிப்பும், திகிலும் ஆற்றொணுத் துன்பமும் உண்டாகின்றன. சில வருடங்களுக்குமுன் யாழ்ப்பாணப் பிரிவில் பல இடங்களிலுள்ள சைவாலயங்களில், சில துஷ்டர்கள்—மனிதப்பதர்கள், கூட்டங் கூடி, ஆயுதபாணிகளாய், இரவில் சோயிற் பூசை முடிந்து, ஊரடங்கியபின், நுழைந்து மூலஸ்தானம் முதலிய இடங்களிற் சென்று அங்குள்ள திருவுருவங்களைக் கீழே புரட்டித்தள்ளி அவைகளின்கீழ் வைக்கப்பட்டுள்ள யந்திரத் தகடுகளையும் அங்கிமுடி முதலிய மற்றைய திருவாபரணங்களையும் சூறையாடிச் சென்றனர். இக்கள்வர் கூட்டத்தையாவது இவர்களோடு சேர்ந்துளவாயிருந்த மற்றைக் கயவர்களையாவது பொலிசர் முதலிய அரசினர் அதிகாரிகளும் கண்டுபிடித்து தகுந்த தண்டனைக் குட்படுத்தினதாகத் தெரியவில்லை. இக்கள்வர்கள் கொஞ்சக் காலத்திற்கு அடங்கியிருந்து இப்போது தங்கள் தொழிலைப் பினனும் நடத்துவதற்கு ஆரம்பித்துவிட்டனர். சென்ற திங்கட்கிழமை (9 8 43) இரவு இச் சூறையாடிக் கள்வர்களில் ஒரு கூட்டத்தார், புலோலிப் பசுபதீஸ்வரனாலயத்தில் கோயிலதிகாரிகள் பூசைமுடிந்து கதவுகள் பூட்டிப் போனபின்னர்—சமயம் பார்த்து உட்புகுந்து மூலத்தானங்களிலும் மற்றைச் சிலத் திருவுருவங்கள் வைக்கப்பட்டிருக்கு முதற்பிரகார அறைகளிலும் சென்று, திருவுருவங்களைப் புரட்டித்தள்ளிவிட்டு, அவைகளின்கீழ் வைக்கப்பட்ட யந்திரங்களையும் அங்கிமுடி முதலிய திருவாபரணங்களையுஞ் சூறையாடிச் சென்றனர். கொள்ளையடிக்கப்பட்ட ஆபரணங்களின் மதிப்பு 6000 ரூபாய்க்கு மேற்பட்ட தொகையென்று சொல்லப்படுகின்றது; அந்தோ இதென்ன பாதகச்செயல்! இதைவிடக் கலிகாலக் கொடுமை என்னே! இதற்குச் சிலநாட்களுக்குமுன்னும் பருத்தித்துறைச் சித்திவிநாயகர் கோயிலிலும் இங்ஙனமே சூறையாடிச் சென்றனர், அடுத்தநாட்காலை இச்சம்பவங்களனைத்தும் மணியகாரன் பொலிசார் முதலிய அரசாட்சி அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் பார்வையிட்டுச் சென்றிருக்கின்றனர்.

இப்படி இக்கயவர்கள் இப்பாவச்செயலைப் புரிவதன் நோக்கம் யாதோ? கோயில்களைக் கொள்ளையடித்துப் பொருள் சம்பாதிக்கலாமென் றெண்ணியோ? அல்லது ஒருசா ணங்கம் வளர்க்க வழிதெரியாமல் இவ்வுபாயச் செயலைக் கையாடுகின்றார்களா? அல்லது சைவசமயிகளாகிய நம்மனோரனைவரையும், மற்றைச்சமயத்தினரது எண்ணத்தில் தாழச்செய்ய வேண்டுமென் றெண்ணியோ? நாம் அறியோம்-ஆயினும் ஆழ்ந்து நோக்கில் சைவசமயிகளையும் - சைவக்கோயில்களையும்-திருவுருவங்களையும் அதனால் தெய்வங்களையும் மிகவும் இழிவுபடுத்திப் பிறர் நகையாடி எள்ளற் பொருட்டே இச் செயல்கள் செய்யப்படுகின்றன வென்று எண்ண இடமுண்டு. ஆனாலும், இவ்வித துஷ்டர் எங்களுக்குள்ளிருந்தென்- பிறர்க்குள்ளிருந்தென்? இவர்கள் மனிதப்பதர்களன்றோ; காட்டு விலங்கினும் கொடியவர்களன்றோ? இவர்கள் இப் பாதகச் செயல்களால் அடையும் பலன்கள் பழியும் பாவமும், அவைகளின் பயனாகத் துஷ்டநோய்களாற் பிடிக்கப்பட்டு அவைகளிலழுந்தி-மறுமையில் நாகத் துன்பத்தை அனுபவிப்பார்கள். இதுநிச்சயம். கடவுளுக்குச் செய்த துரோகமோ பொறுக்கப்பட மாட்டாது. எங்கும் வியாபகமாயிருந்து எல்லாம் அறியுமறிவு இயற்கையிலில்லாதவ னாதலால் அரசனுடைய தண்டத்திற்குத் தப்பினும் தப்பலாம். கடவுளுடைய தண்டத்திற்கோ தப்பமுடியாது. இசுரத் துரோகம் எவ்வகைப்பட்ட பிராயச்சித்தத்தாலும் தீராது.

எங்களாலயங்களில் இவ்வித தீச்செயல்கள் நடைபெறுவதற்கு நம்முடைய வாழ்க்கையின் நவீனமும், ஆலயப் பாதுகாப்பின் சீர்கேடும், அர்ச்சகர் முதலியோரின் ஆசாரக் குறைவும் அறியாமையும் காரணங்களாகும் என்றே சொல்ல வேண்டும். நமது வாழ்க்கையை முற்றும் உலோகாதய வாழ்க்கையில் அமிழ்த்தாது பரோபகாரத்திலும் சமயப்பற்றிலும் செலுத்த முன்வரல் வேண்டும். சைவர்களின் சமயப்பற்று அதிகரிக்க வேண்டும். ஏனைய சமயிகளின் தொகையோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நமது மக்களின் சமயப்பற்று மிகக் குறைவு என்றே சொல்லலாம். கோயில் வழிபாடு குறைந்து கொண்டது. அதனால், ஆலயப்பாதுகாப்பு, ஆலய பூசைகள், ஆலய தொண்டுகள் குறைவின்றி நிகழ்தற்குத் தடைகளுண்டாயின. இன்னும், ஆலய அதிகாரிகளும் குரவர்களும் தங்களறியாமை நீக்க முயலல்வேண்டும். சமயநூல்களை-ஆகமாதி சாஸ்திரங்களை நன்கு கற்றல் வேண்டும். சமயப் பிரசாரங்கள் செய்யப்பட்டுச் சமயத்தில் பற்றுண்டாக்கப்படல் வேண்டும். அப்பற்றைத் தினசரி வாழ்க்கையில் காட்டல் வேண்டும். இங்ஙனம் எல்லோரும் ஒரு புனிதவாழ்க்கையைப் பின்பற்றல்வேண்டும். அப்படி ஒழுகுவோமாயினன்றோ நமக்குக் கடவுளின் திருவருள் கிடைக்கும்.

மேலும் கோயில்களில் இத்தீச்செயல்கள் இனிமேல் நிகழாவண்ணம் கோயிலதிகாரிகளும் அர்ச்சகர்களும் அடியார் முதலியோர்களும் சாவதானமாய்க் காவல்புரிந்து பாதுகாப்பார்களாக என்பதை வற்புறுத்துகின்றோம்.

இங்ஙனம்,
வ. சுப்பிரமணியன்,
சைவப்புலவர், புலோலி சைவ ஆங்கில வித்தியாசாலை.

தும்பளை,
பருத்தித்துறை, 15-8-43.


## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

**134,36700**

**100 ரூபா விகிதமான 8000 பங்குகள்**

பங்குப்பணங் கட்டுமுறை

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம், 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Y 164 21-11-41—20-11-43 (தி)



## சிறுபிள்ளை வைத்தியத்திலும் ஏனைய வைத்தியங்களிலும் சித்திபெற்ற சில்லாலை முத்துவைத்தியசாலை



சாதாரணமாகச் சிறுவர்களுக்கு வரும் கிரந்தி, சலதோஷம், வயிற்றோட்டம், காய்ச்சல் முதலிய நோய்களைத் தணிக்கும் ஒப்புயர்வற்ற அரிய பெரிய மருந்துகளும் நெடுநாட்பட்ட இருமல் மேகம் கிரந்தி வாதங்களை அகற்றும் அனுபவம் வாய்ந்த சிறந்த மருந்துகளும், எண்ணெய்வகைகளும் எம்மிடம் ஏராளமாயுண்டு. ஏழைகளையும் தனவந்தர்களையும் ஒரேசீராய் நடத்தும் அரசினரின் அங்கீகாரம் பெற்ற சில்லாலை முத்து வைத்தியர்.

அ. செபஸ்தியாம்பிள்ளை பெரியதெரு, நம். 160, மேல்வீடு, யாழ்ப்பாணம்.

(Q. 30. 11-5.43—10-8.43)



## குறைந்த விலையில் துணிகள்

ஷேட்துணிகள், துவாய்கள் பஞ்சாலும் பட்டாலும் ஆகிய சேலைகள் முதலியவை.

**R. S. M. டெக்ஸ்டைல் ஸ்ரோர்ஸ்**

மொத்தத்துக்கும் சில்லறைக்கும் விற்கும் வியாபாரிகள்

பெரியகடை—யாழ்ப்பாணம்.

K. A. இரத்தினசிங்கம்,
பங்காளர்.

Y 19. 4-3-42—3-3-44


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai, Jaffna, on Monday 23, August, 1943.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org